பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

தொழுகை விளக்கம்.

487

கம்பம் உத்தமபுரம்,

ஹாஜி

இ. அல்லாபிச்சை ராவுத்தரால்

எழுதப்பெற்றது.

நீடூர் நெய்வாசல் மௌலானா மௌலவி

மு. அப்துல்கரீம் ஆலீம் சாஹிப்

அவர்களால் பரிசோதித்து

தேனி

ஹக்கீம் பிரஸில் அச்சிடப்பட்டது.

[காப்பி 1000

எப்பில் 1௳]

1934.

17 JAN 1935

97:414
N34
171794.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

தொழுகை விளக்கம்.

கம்பம் உத்தமபுரம்,

ஹாஜி. இ.

அல்லாப்பிச்சை ராவுத்தரால்

எழுதப்பெற்றது.

நீடூர் நெய்வாசல் மௌலானா மௌலவி

மு. அப்துல்கரீம் ஆலீம் சாஹிப்

அவர்களால் பரிசோதித்து

தேனி

ஹக்கீம் பிரஸில் அச்சிடப்பட்டது.

எப்பில் 1௳] — [காப்பி 1000

1934.

OFFICE OF THE REGI... 17 JAN 193..

முகவுரை.

சர்வ சிருஷ்டி கர்த்தாகிய அல்லாஹுத்தஆலாவைப்போற்றிப்புகழ்ந்து சத்தியத்தூதரும் சகலஜீவகோடிகளுக்கு சிரேஷ்டரும் பரிசுத்த இஸ்லாத்தின் தீர்க்கதரிசியும் சமத்துவப்போதகரும் கடைத்தேற்றும் வள்ளலுமாகிய நபிகள் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது ஆசிமொழியுங் கூறியபின் எனதன்பார்ந்த முஸ்லீம் சகோதர சகோதரிகாள் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபாக்காத்தாஹு; நக்தென்னாட்டு முஸ்லீம்களுக்கு அவசியமான சில முக்கியமார்க்க சட்டதிட்டங்களை தமிழ்பாஷையிலெழுதி வெளியிடவேண்டுமென்ற எண்ணமானது என்மனதிலிருந்துகொண்டேயிருந்தது. ஆனால் தற்போது நமது தென்னாட்டில் இஸ்லாத்தை தழுவிவரும் முஸ்லீம் சகோதரர்களுக்கு இந்நூல் மிகவும் அவசியமாக வேண்டியதாயிருப்பதால் உலகமக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சில கிரந்தங்களிலிருந்து அவசியமான சில சட்டதிட்டங்களை பொறுக்கி எடுத்து (தொழுகை விளக்கம்) எனப்பெயர்சூட்டி இச்சிறிய நூலை அரபியிலும் தமிழிலும் எழுதவேண்டியதாயிற்று மேலும் தமிழில் தக்க பாண்டித்துவமுள்ளவர்களும் தமிழை தாய்பாஷையாகக் கொண்டவர்களும் இனியதமிழாக எழுதுவதைப்போல் சொற்சுவை நடையலங்காரம் இவைகளமையப் பெற்றதாக இந்நூலிராது. இஃதன்றி ஆங்காங்கு இலக்கண இலக்கிய பிழைகளும் காணப்படும் ஆகையால் சகோதரர்கள் அவற்றை பாராட்டாமல் கருத்தை மட்டும் உணர்ந்து அதன்படி அனுஷ்டிக்கும்படியாய் கேட்டுக் கொள்கிறேன்.

நம்மனைவருக்கும் இறைவன் இகபர நற்பயனை அருள்புரிவானாக
ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

கம்பம்,
1—4—1934. } ஹாஜி. இ. அல்லாப்பிச்சை ராவுத்தர்.

I

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

தொழுகை விளக்கம்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்

(இதை ஆரம்பிக்கிறேன்,)

ஐந்து கலிமாக்களின் பொருள்கள்.

1. வணக்கத்துக்குப் பாத்தியவான் (தகுந்தவன்) அல்லாஹு த்தஆலாவைத்தவிர வேறு நாயனில்லை. (யாருமில்லை) முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வின் திருத் தூதராக இருக்கிறார்கள்.

2. நான் பிசகற அறிந்து சாட்சி சொல்லுகிறேன். நிச்சயமாக வணக்கத்துக்குத் தகுந்தவன் அல்லாஹுத்தஆலாவைத்தவிர வேறேயாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்குயாதொருஇணையுமில்லை. இன்னும் பிசகற அறிந்து சாட்சி சொல்லுகிறேன். நிச்சயமாக முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹுத்த ஆலாவின் உரிய அடியாராகவும், அவனின் உண்மைத் தூதராகவுமிருக்கிறார்கள்.

3. அல்லாஹுத்தஆலா மிகவும் பரிசுத்தமானவன், எல்லாப்புகழும் அவனுக்கே உரியது. இன்னும் வணக்கத்துக்குத்தகுந்தவன் அல்லாஹுத்தஆலாவைத்தவிர வேறு யாருமில்லை. அல்லாஹுத்தஆலா மிகவும் பெரியவன். நாம் பாவம் செய்வதைவிட்டு திரும்புவதும், நன்மை செய்வதற்குறிய பலமும், மேலான வலுப்பமுடைய அல்லாஹுத்தஆலாவின் உதவிகொண்டே ஒழிய இல்லை.

4. வணக்கத்துக்குத்தகுந்தவன் அல்லாஹுத்தஆலாவைத் தவிர வேறுயாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு

இணையுமில்லை. இராஜாங்கமெல்லாம் அவனுக்கே உரியதாகும். மரண மானவர்களை உயிர்ப்பிப்பான். உயிரோடிருப்பவர்களை மரணமாக்கு வான். நலவடங்கலும் அவன் வசமே இருக்கிறது. அவன் எல்லா வஸ்துக்களின் மீதும் மிகவும் தத்துவம் பெற்றவனாகவுமிருக்கிறான்.

5. ஆண்டவனே நான் அறிந்தவனாக அறவே உனக்கு ஒரு வஸ்துவையும் இணைவைப்பதை விட்டு உண்மையாக உன்னைக்கொண்டு காவல் தேடுகிறேன். நானறியாமல் செய்த குற்றத்திற்கு உன்னிடத்தில் பிழை பொறுக்கத் தேடுகிறேன். நீ மெய்யாக மறைவானவை யடங்கலையும், மிகவும் அறிகிறவனாகயிருக்கிறாய். இணைகளை விட்டுந் தௌபாச்செய்து மீண்டேன். இஸ்லாமென்னும் மார்க்கத்தைத் தவிர மற்ற மார்க்கங்கள் யாவையும் விட்டு நீங்கிவிட்டேன். நானிஸ்லாமாகிச் சொல்கிறேன். வணக்கத்துக்குப் பாத்திரமாகிய நாயன் அல்லாஹுத்தஆலாவைத் தவிர வேறு நாயனில்லை முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹுத்தஆலாவினுடைய திருத்தூதாக இருக்கிறார்களென்று ஈமான் கொண்டேன்.

ஈமான் முஃஸலின் பொருள்.

1. அல்லாஹுத்த ஆலா ஒருவனைக்கொண்டும், அவனுடைய மலக்குகளைக்கொண்டும், அவனுடைய வேதங்களைக் கொண்டும், அவனுடைய நபிமார் றசூல்மார்களைக்கொண்டும், ஒடுக்கத்து நாளைக்கொண்டும், அல்லாஹுத்தஆலாவில் நின்றுமுள்ள நலவாகிய கட்டளைகளையும், தீங்காகிய கட்டளைகளையும் கொண்டு ஈமான் கொண்டேன். அல்லாஹ் ஒருவன் உண்டென்று உறுதிகொண்டேன். சட்டத்துக்குத் தலைவன் இவனே.

2. அவனுடைய அமரர்கள் (மலக்குகள்) உண்டென்று உறுதி கொண்டேன். இவர்கள் ஆண்டவனுடைய ஏவலை செய்கிறவர்கள்.

3. அவனுடைய வேதங்களும் ஆகமங்களும் உண்மை யென்று உருதிகொண்டேன். இவைகளில் அவனுடைய சட்டங் கள் வெளியாயிருக்கின்றன.

4. அவனுடைய அடியாரான தூதர்கள், (மனித தூதர்கள்) உண்டென்றுஉருதி கொண்டேன் இவர்கள் மூலமாகத்தான் ஆண்டவனுடைய சட்டங்கள் உலகில் வெளியாயின.

5. கடைசியில் நியாயத்தீர்ப்புநாள் உண்டென்று உருதி கொண்டேன். அப்போது நம்முடைய நன்மை தீமைகள் இன்னின் னவை யென்று விசாரிக்கப்படும்.

6. மரணத்துக்குப்பின் என் இகலோக செய்கைகளின் பலாபலனை பெறுவதற்கு நான் ஆஜராகுதல் உண்டென்றும், உருதி கொண்டேன். நியாயத்தீர்ப்புக்கு பின் பேரானந்தமோ பெருந்துக் கமோ அடைகிற நாள் இது.

மலபாதை ஜலபாதை சுத்தி செய்வதின் விபரம்.

சடலத்தையும், புடவைகளையும் சுத்தி செய்யாமலிருப்பது கொண்டு கப்ருடைய அதாபு அதிகமாக இருக்குமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம் பற் றினார்கள். ஆகையால் துப்பரவு செய்வதில் சற்றுஞ் சோம்புதல் செய்யாமலிருப்பது மனிதர்களின்பேரில் கடமையாயிருக்கிறது. இனி சிறுநீர் செய்வதற்குமுன் நீரையுண்ணும்படியான துப்பரவாகிய மண்ணாங்கட்டி போன்றதில் பிறர் சொத்தில்லாததை மூன்றுதரம் பூமியில் தட்டியெடுத்துக் கொண்டுபோய் பூமி உட்கார்ந்திருந்தால் மெதுவாக்கி அல்லது மேட்டிலிருந்து சிறுநீர் செய்தபின் ஆண்குறி யென்னும் (தகரை) அடியிலிருந்து (கத்னாவிருத்தசேதனஞ்செய்திருப் பது) வரை மட்டிலும் மெதுவாய்ப்பிடித்து விட்டு நீர்வடிந்தபின் கட் டி பிடித்து, உலர்த்திக் கனைத்து, இடதுகாலை வலது காலின்பேரில் சேர்த்து, நீர்க்கசிவு நின்றதாக கல்பு (மனது)க்கு புலப்பட்டபின் தண்ணீர்விட்டு இடதுகையால் கழுகவேணும். நீர்க்கசிவு நிற்கிறது புலப்படாமல், ஒலுச்செய்தால் துருஸ்தாகாது (கூடாது.)

இனி மலபாதை ஜலபாதை செய்ய உட்காரும்போது அபத்தை (வெட்கஸ்தலத்தை) கிப்லாவுக்கு (மேற்கு திசைக்கு) நோக்குகிறதும் பிற்காட்டுகிறதும் (கட்டடத்திற்குள் இருந்தாலும் சரி.) மக்ரூஹ் தஹ்ரீமாயிருக்கும் (கூடாத செய்கையாகும்.) இன்னுஞ்சுத்திசெய்யும்போது, அபத்தை கிப்லாவுக்கு நோக்கிறதும், பிற்காட்டுகிறதும், மக்ரூஹ்தன்ஜீஹாயிருக்கும் என்கிலும் சிறுநீர் செய்வதற்கு உடுத்தாடையை முழங்காலைவிட்டும், பின் துவாரத்தை விட்டும் நீங்காமல் கிழக்கே பார்க்கவிருந்து சுத்திசெய்வது மக்ரூஹல்ல ஜனங்களிருக்கும்போது, உடுத்தாடையை முழங்காலை விட்டு நீக்குகிறது ஹராம். மலபாதை ஜலபாதை செய்யும்பொழுது, சந்திரனையோ சூரியனையோ முன்னோக்குவது மக்ரூஹ். இன்னும் செங்கல், கரி, சுண்ணாம்பு, இதுபோன்ற எரிந்த வஸ்துவும், எலும்பு காய்ந்த எரு அல்லது தின்னப்பட்ட வஸ்து பளிங்கு இவை போன்ற வஸ்துக்களைக்கொண்டு துப்பரவு செய்வதும், வலது கையைக்கொண்டு துப்பரவு செய்வதும் மக்ரூஹ். எந்த நேரமாவது கிப்லாவை முன்னோக்கித் துப்புவதும், வலதுபுறம் துப்புவதும் மக்ரூஹ். பின்னர் மலபாதைக்குப் போகும்போது முன் ஜலபாதைக்குச்சொன்ன பிரகாரம் துப்பரவாகும்படியான வஸ்துக்கள் பிறர் சொத்துக்களில்லாமல் எடுத்துக்கொண்டுபோய் பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம இன்னிஆவூதுபிக்க மினல்குபுதிவல்கபாயிதி என்று சொல்லி இடதுகாலை உள்ளே வைத்து வாய்பேசாமல், மூக்குச்சிந்தாமல், அதிகந்திரும்பிப்பாராமல், கனைக்காமல், அதிகநேரம் இருக்காமல், வெட்கஸ்தலத்தையும், நஜிஸையும் (மலத்தையும்) பாராமல் எச்சில் துப்பாமல் தலை கவிழ்ந்தவனாக இருந்து மல ஜலத்தைவிட்டு நீங்கினவுடனே, ஆண்குறியை அடியிலிருந்து மெதுவாய்ப்பிடித்துவிட்டு மூன்று கல் அல்லது அதிக கற்களைக்கொண்டு நஜிஸைத்துடைக்கவேண்டும். கோடைகாலத்தில் பீசந்தொங்குமாதலால், முதலாவது கட்டியையும், மூன்றாவது கட்டியையும், முன் பக்கமிருந்து பின் பக்கங்கொண்டுவரவேண்டும் இரண்டாவது கட்டியை பின் பக்கமி ந்து முன் பக்கங்கொண்டுவரவேண்டும், குளிர்காலத்தில் பீசஞ்சுருங்குமாதலால், முதலாவது கட்டியையும், மூன்றாவது கட்டியையும், பின் பக்கமிருந்து முன்பக்கங்கொண்டு வரவேண்டும்.

இரண்டாவது கட்டியை முன் பக்கமிருந்து பின் பக்கங்கொண்டு போகவேண்டும் பெண் பிள்ளைகள் எக்காலத்திலும், ஆண் பிள்ளைகள் கோடைகாலத்தில் செய்துவருகிற மாதிரி முதலாவது கட்டியையும், மூன்ருவது கட்டியையும், முன் பக்கமிருந்து பின் பக்கங்கொண்டுவரவேண்டும். அப்பால் சுத்த ஜலத்தால் துப்பரவாக கழுகிக்கொள்ளவேண்டும்.

அதானின் விபரம் (தொழுகைக்கு அழைத்தல்.)

பாங்கு சொல்வது ஆண்களுக்கு சுன்னத்து. (கலாவான) தவறிப்போன தொழுகையைத் தொழுகும்போதும், பாங்கு சொல்லிக்கொள்வது சுன்னத்தாக இருக்கிறது.

பஜ்ரில் மட்டும் ஹைய்ய அலல்பலாஹ் என்று இருமுறை சொன்னதின் பின் அஸ்ஸலாத்து கைருன்மினன் நெளம் என்று இருமுறை சொல்லவேண்டும். இன்னும் ஹைய்ய அலல்ஸலாத் என்று சொல்லும்போது வலது பக்கமும் ஹைய்யஅலல்பலாஹ் என்று சொல்லும்போது இடது பக்கமும், முகத்தைமட்டுந்திருப்ப வேண்டும்.

மஸ்அலா இரண்டு பெருநாளின் தொழுகைக்கும், பாங்கு இக்காமத்துச் சொல்லக்கூடாது. ஒருவருக்கு பல நோத்துத்தொழுகைகள் தவறிப்போய் அதை கலாச்செய்யும்போது, முந்தின நோத்து தொழுகைக்குமட்டும் பாங்கும், இக்காமத்தும் சொல்லிக்கொண்டு, மற்றத் தொழுகைகளுக்கு இக்காமத்துமட்டும் சொல்லிக்கொண்டு தொழுதால் போதுமானது.

அதான்சொல்வதற்கு பதில் சொல்லிக்கொள்வது. அல்லாஹ் அக்பர் என்று சொல்வதற்கு ஜவாபு, அதையே சொல்வது. அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு என் று சொல்வதற்கு ஜவாபு, அதையே சொல்வது. அஷ்ஹது அன்ன முஹம்மதுர் றசூலுல்லாஹ் ஜவாபு, சலவாத்து சொல்லிக்கொள்வது. ஹைய்யஹலஸ்ஸலாத் ஜ வா பு; வலாஹவுலவலாகூவத்த இல்லாபில்லாஹில்

அலீயுல் அலீம் ஹையயஹலல்பலாஹ் ஜவாபு மாஷா அல்லாஹ்கான வமாலம்யஸ்அலம்யகூன் அல்லாஹ் அக்பர் அதையே சொல்வது. லாயிலாஹ இல்லல்லாஹு அதற்கு ஜவாபு, லாயிலாஹ இல்லல்லாஹ் மூஹம்மதுர் றசூலுல்லாஹி என்று சொல்லிக்கொள்வது.

இக்காமத்து.

பர்லு தொழுகைக்கு முன்னல் சொல்லும் இக்காமத்தும் பாங்கைப்போலவே சொல்லிக்கொள்ளவேண்டியது. ஆனல் பாங்கை திருத்திச்சொல்லவேண்டும். இக்காமத்தைச்சற்று துரிதமாக சொல்லவேண்டும். ஆனல் ஹையய அலல்பலாஹ் என்று இருமுறை சொன்னபின் கதுக்காமத்திஸ்ஸலாத் என்று இருமுறை சொல்லவேண்டும். இன்னும் பஜ்ருடைய இக்காமத்தில் அவ்வேளையின் பாங்குடன் சேர்க்கப்படும். அஸ்ஸலாத்கைருன் மினன்னௌம் என்னும் வாக்கியத்தைச் சொல்லவேண்டியதில்லை.

தொழுகையின் நேரங்கள்.

---

1. பஜ்ரு. கிழக்கு வெழுத்தது முதல் சூரியன் உதையமாகும் வரையாகும்.

2. துஹர். சூரியன் உச்சிவந்து அடி சாய்ந்தது முதல் ஒரு வஸ்துவின் நிழல் அசல் நிழலைத்தவிர அவ்வஸ்துவின் நிழல் இரண்டு பங்கு ஆகும் வரையினாயிருக்கும்.

3. அஸர். துஹருடைய சோம் சென்றதுமுதல் சூரியன் அஸ்தமனமாகும் வரையிலாயிருக்கும்.

4. மஹ்ரிப். சூரியன் அடைந்தது முதல் செவ்வானம் மறையும் வரையினாயிருக்கும்.

5. இஷா. செவ்வானம் மறைந்தது முதல் மெய்வெள்ளையென்னும் கிழக்கு வெழுக்கும் வரையிலாயிருக்கும்.

சூரியன் உதிக்கும்போதும், சூரியன் உச்சியிலிருக்கும்போதும், சூரியன் அஸ்தமனமாகும்போதும், தொழுகிறது ஹாராமாக கூடாததாக) இருக்கிறது.

உலுச்செய்யவேண்டிய முறைகள்.

மலபாதை ஜலபாதைகளை தண்ணீரால் கழுகியபின் கையிரண்டையும் மணிக்கட்டுவரை மூன்றுமுறை, வாய்க் கொப்பழிக்கிறது மூன்று முறை, நாசி வலதுபக்கம் துடங்கி இடது நாசியையும், குடைந்து மூன்றுமுறை, நெற்றி உரோமத்தின் முதல் மேவாயின் கீழ் வரையிலும், வலது காது முதல் இடது காது வரையிலும் மூன்று முறை, வலது முழங்கை இடது முழங்கை மூன்று முறை கழுகிய பின், நாலிலொருபங்கு தண்ணீரால் தலைக்கு மஸஹு செய்து இரண்டு காண்டைக்கால் உட்பட மூன்றுமுறை கழுகிக்கொள்ள வேண்டும். இதில்ஒரு உரோமமாவது நனைக்காமலிருக்கப்படாது.

உலுவின் பர்லுகள் நான்கு.

1. நெற்றி உரோமத்தின் அருகுமுதல் மேவாயின் கீழ்வரையிலும், ஒரு காதுமுதல் மறுகாது வரையிலும் கழுவுவதும்.
2. இரு கைகளையும் முழங்கை மொழியுட்பட கழுவுவதும்.
3. தலையில் நாலில் ஒருபங்கு தண்ணீரால் மஸஹுசெய்வதும்
4. இரு பாதங்களையும் காண்டைமொழியுட்பட கழுவுவதும் பர்லு ஆகும். இவ்வுருப்புகளில் ஒரு உரோமமளவு நனையாவிட்டால் உலுக்கூடாது.

உலுவின் சுன்னத்துகள் பதின்மூன்று.

1 உலுச்செய்வதாக நிய்யத்துச் செய்வது
2. இரண்டு கரங்களையும் மணிக்கட்டுவரை கழுவுவது.
3 உலுச்செய்ய ஆரம்பிக்கும்போது பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர்றஹீம் என்று சொல்வது.

4. மிஸ்வாக்கை கொண்டு பல் துலக்குவது.

5. வாய் கொப்பளிப்பது.

6. நாசிக்குத் தண்ணீர் செலுத்துவது.

7. ஒவ்வொரு உருப்புகளையும் மூன்று தடவை கழுவுவது.

8. தர்த்தீப் என்னும் செய்யவேண்டிய முறைப்படி செய்வது.

9. தொடர்ச்சியாக கழுவுவது (ஒரு உருப்பு காயுமுன் மறு உருப்பை கழுவுவது.)

10. விரல்களை கோதிக்கழுவுவது.

11. அடர்ந்த தாடியை கோதிக்கழுவுவது.

12. தலைமுழுதும் மஸஹ் செய்வது.

13. காதுகளை மஸஹ் செய்வது.

இந்த பதின்மூன்று காரியங்கள் சுன்னத்தாகும். இந்த செய்கைகளில் ஒன்று விட்டுப்போனாலும் மக்ரூஹ் ஆகிவிடும்.

உலுவின் முஸ்தஹப் எட்டு.

1. உலுச்செய்பவர் கிப்லாபக்கம் முகத்தை நேர்படுத்தியிருப்பது.

2. சற்று உயர்ந்த இடத்திலிருந்து கொள்வது.

3. உருப்புகளைக் கழுகும்போது பிஸ்மில்லாஹ் அல்லது ஷஹாதத் கலிமா ஓதுவது.

4. வலது உருப்புகளை முதலில் கழுக ஆரம்பிப்பது.

5. பிடரிக்கு மஸஹ் செய்வது.

6. தொழுகை வக்த்து வருமுன் உலுச்செய்வது.

7. மற்றவர்களின் உதவியன்றி உலுச்செய்வது.

8. உலுச்செய்து முடிந்தபின் துஆ ஓதி சொற்ப ஜலம் குடிப்பது முஸ்தஹப்பாகும்.

உலுவின் மக்ரூஹ் எழு.

1. அசுத்தமான இடத்திலிருந்து உலுச்செய்வது.

2. உலுச் செய்யும்போது, உலக சமாசாரங்களைப் பேசுவது.

3. முகம் கழுகும்போது கண்களை இருக மூடிக்கொள்வது.

4. தண்ணீரை மிகுதியாகச் செலவு செய்வது.

5. முகத்தை தண்ணீரால் பலமாக அடிப்பது.

6. இடதுகை கொண்டு வாய்க்கும் நாசிக்கும் தண்ணீர் செலுத்துவது.

7 வலதுகை கொண்டு மூக்கை சுத்தஞ்செய்வது, மக்ரூஹாகும்.

உலுவின் முரிச்சல் ஒன்பது.

1. முன் துவாரம் பின் துவாரம் இவைகளிலிருந்து எதாவது வெளியானாலும்.

2. புண் காயங்களிலிருந்து இரத்தம், சீ, சலம் வெளியானாலும்.

3. தன்னை மறந்து நித்திரை கொண்டாலும், ஒரு வஸ்துவின் மீது சாய்ந்து உறங்கினாலும்.

4. வாய் நிறம்ப வாந்தி எடுத்தாலும்.

5. மதி மயக்கம் உண்டானாலும்.

6. லாகிரி வஸ்துவைக்கொண்டு போதையானாலும்.

7. பயித்தியமானாலும்.

8. இரண்டு வெட்கஸ்தானங்கள் ஒன்றோடொன்று சேர்ந்தாலும்.

9. ஜனஸா தொழுகையைத்தவிர மற்ற தொழுகைகளில் கலகலவென்று சிரித்தாலும் உலுமுரிந்துவிடும். மூன்று காரியம் உலுவில்லாதவர்கள் செய்தல் ஹராமாகும்.

1. தொழுகிறது. 2. குர்ஆன் ஷரீபை தொடுவது. 3. கஃபாவை தவாபு செய்வதும் ஆகாது.

தயம்மத்தின் விபரம்.

தண்ணீர் சுமார் ஒன்றரை மைல் தூரத்திலிருந்தாலும், அல்லது வியாதியால் தண்ணீரான தேகத்தை அசௌகரியப் படுத்தினாலும், அல்லது துஷ்ட மிருகங்களின் பயமிருந்தாலும், அல்லது பெருநாள் தொழுகை, ஜனாஸா தொழுகை கிடைக்க முடியாமல்போகும் என்ற காரணம் ஏற்பட்டாலும், உலுவுக்குபகாரமாக தயம்மம் செய்து கொள்ளலாம்.

தயம்மத்தின் பர்லு மூன்று.

1. சிறுந்துடக்கு பெருந்துடக்கு என்னும் அசுத்தத்தை நீக்குவதற்காக நான் தயமம் செய்கிறேன் என்று நிய்யத் செய்வது.

2. இரு கைகளால் முகத்தை தடவுவது

3. இரு கைகளையும் முழங்கை மொளி உட்பட தடவுவது பர்லு.

தயம்மம் செய்யுமுறை.

சுத்தமான மண்ணில் இரு கரங்களையும் விரித்து அடித்து முன்னும் பின்னுமாக இழுத்து கையோடு கையை பின்புரமாய் தட்டி முகமுழுவதும், ஒரு ரோமம் அளவையும்கூட விடாமல் தடவியபின் மறுபடியும் முன்போல இருகைகளையும் மண்ணில் அடித்து முன்பின்னிழுத்து இடதுகை நான்கு விரல்களையும், வலதுகை பின்புறத்து விரல்களின் நுனிமுதல் முழங்கைவரை யிழுத்து, மேற்படி இடதுகை உட்புரத்தை மறுபுறமாக தடவி, இடதுகை பெருவிரலை வலதுகை பெருவிரலின்மீது தடவுவதும், இதுபோலவே வலதுகையால் இடதுகையையும் தடவிக்கொள்வதும் தயம்மம் ஆகும். உலுவுக்காக செய்யுந்தயம்மமும் முழுக்குக்காக செய்யுந்தயம்மமும் ஒரே விதந்தான். ஆனால் இன்ன விஷயத்திற்காக தயம்மம் செய்கிறேன் என்று நிய்யத் செய்துகொள்ளவேண்டும். உலுவை முறிக்கும்

காரியங்களனைத்தும் தயம்மத்தையுமுறித்துவிடும். ஆனால் உலுவுக்குப்போதுமான தண்ணீர் கிடைத்தாலும், வியாதி சொஸ்தமானாலும், துஷ்ட மிருகங்கள் நீங்கிவிட்டாலும், தயம்மம் முறிந்துவிடும். தயம்மம் செய்துகொண்டு தொழுதும் இமாமை உலுச்செய்தவர்கள் பின் தொடர்ந்து தொழுகிறது ஜாய்ஸாகும்.

முழுக்கின் பயான்.

ஒருவன் தூங்கியெழுந்த பிறகு தேகத்திலாவது உடையிலாவது, சொர்ப்பனத்தால் இரத்தைக்கண்டாலும், ஆசையுடன் இந்திரியம் குதித்து வெளியானாலும், பெண்களின் ஹைல் என்னும் மாதவிடாய் நின்றுவிட்டாலும் நிபாஸ் என்னும் பிள்ளை பிறந்த தீட்டு நின்றுவிட்டாலும் முழுக்கு விதியாகிவிடும். இன்னமும் சம்போகத்தால் ஆண், பெண் இருவர்கள் பேரில் முழுக்கு விதியாகிவிடும்.

முழுக்கின் பர்லு மூன்று

---

1. வாய் கொப்பளிக்கிறதும், 2. நாசிக்கு நீர் செலுத்துவதும், 3 தேகம் அடங்கலும் நனையக் குளிக்கிறதும் பர்லாகும். தேகத்தில் ஒருரோமம் அளவு நனையாவிட்டால் முழுக்குக்கூடாது. ஆனால் சில பாகம் நனையாமல் இருந்தால் பின்பு அந்தபாகத்தை மட்டும் தண்ணீரால் கழுகிக்கொண்டால் போதும் துருஸ்தாகிவிடும்.

முழுக்கின் சுன்னத்து ஐந்து.

---

1. முழுக்கை நீக்குவதற்காக குளிக்கிறேன் என்று நிய்யத் செய்வது.

2. வெட்க ஸ்தானத்தை கழுகுவது.

3. தேகத்திலாவது உடையிலாவது நஜிஸ்பட்டிருந்தால் அதை சுத்தஞ்செய்வது

4. உலுச்செய்து கொள்வது.

5. தண்ணீர் ஊற்றிக்குளிக்கும்போது வலது தோள் இடது தோள் தலை இவைகளின் பேரில் மூன்றுதடவை தண்ணீர் ஊற்றிக் கொள்வது சுன்னத்தாகும்.

முழுக்காளிகள் செய்யக்கூடாத காரியங்கள் ஐந்து,

1. தொழுகிறது.
2. குர்ஆன் ஷரீபைத்தொடுவது.
3. குர்ஆன் ஷரீபை ஓதுவது.
4. மஸ்ஜிதுக்குள் நுழைவது.
5. கஃபாவை (தவாபு) சுற்றுவது.

மாதவிடாயான அல்லது பிள்ளைபெற்றபெண் தீட்டுள்ளவளை மேலே சொன்ன ஐந்து காரியத்துடன் புருஷரோடு சம்போகஞ் செய்வதும் நோன்பு பிடிப்பதும் ஆக எழுகாரியங்களும் ஹராமாக இருக்கும்.

தொழுகையின் ரக்ஆத்களின் பயான்.

1. பஜ்ரில் சுன்னத்து 2, பர்ளு 2 ஆக நாலு ரக்ஆத்.

2 லுஹரில் சுன்னத்து4, பர்ளு4, அடுத்த சுன்னத்து2, நபில் 2 ஆக பன்னிரண்டு ரக்ஆத்

3. அஸரில் சுன்னத்து 4, பர்ளு 4 ஆக எட்டு ரக்ஆத்.

4 மஹரிபில் பர்ளு 3, சுன்னத்து 2, நபில் 2 ஆக எழுரக்ஆத்.

5 இஷாவில் சுன்னத்து4, பர்ளு4, அடுத்தசுன்னத்து2, நபில் 2, வித்ரு வாஜிபு 3 தஸ்பீஹறு நபில் 2, ஆக பதினேழு ரக்ஆத்.

தொழுகையின் பர்ளு பதின்மூன்று

1. தொழுகையின் நேரத்தை தெரிந்துகொள்வது.
2. தேகம் சுத்தமாக இருந்துகொள்வது.

3. உடைகள் சுத்தமாக இருப்பது.

4. தொழுகிற இடம் சுத்தமாக இருப்பது.

5. அவ்ரத்தை மறைப்பது (அதாவது ஆண்கள் தொப்புளிலி ருந்து முழங்கால் வரையும் பெண்கள் முகமும், இரண்டு முன் கையும், இரண்டு பாதங்களும் தவிர மற்ற எல்லாத் தேகங்களையும் மறைப்பது)

6 கிப்லாவின் திசையில் முகத்தை ஆக்கிகொள்வது.

7 நிய்யத்து அதாவது மனதில் இன்ன தொழுகை என்று நினைத்துக்கொள்வது.

8 தக்பீர் தஹ்ரீமா சொல்வது.

9 நிலைநிற்பது (பர்லு தொழுகைகளிலும், வாஜிபான தொழுகைகளிலும் பஜ்ரின் சுன்னத்து தொழுகையிலும் முக்கியமானது)

10. கிராஅத்து அதாவது குர்ஆன் ஆயத்துகளை ஓதுவது.

11. ருக்கூவு செய்வது.

12. ஸஜ்தா செய்வது.

13. தொழுகையின் கடைசி இருப்பில் உட்காருவது.

இந்த பதின்மூன்று பர்லுகளைத்தவிர 1 தொழுகவேண்டிய முறைப்படி தொழுகிறதும், 2 தொழுகையைவிட்டு ஞாபகமுடன் நீங்கிக்கொள்வதுமாகிய இந்த இரண்டையும் சில இமாம்கள் பர்லு என்று சொல்கிறார்கள். இவைகளில் ஒன்றையேனும் தவறவிட்டால் தொழுகைகூடாது.

தொழுகையின் வாஜிபு இருபத்தொன்று.

1. முந்தின தக்பீர் தஹ்ரீமாவில் அல்லாஹ் என்னும் வார்த்தையுடன் அக்பர் என்னும் வார்த்தையைச் சேர்த்துச்சொல்வது

2. அல்ஹம்து முழுவதும் ஓதுவது.

3. ஒவ்வொரு ரக்ஆத்திலும் அல்ஹம்தை சூராவுக்கு முன் ஓதுவது.

4. அல்ஹம்துக்குப்பின் சூரா ஓதுவதும் பெரிய ஆயத்தாக இருந்தால் ஒரு ஆயத்தும் சிறிய ஆயத்தாக இருந்தால் மூன்று ஆயத்துகள் ஓதுவது.

5. அல்ஹம்தை முந்தின இரண்டுரக்ஆத்தில் குறிப்பாக ஓதுவது

6. மெதுவாக ஓதவேண்டிய இடத்தில் மெதுவாக ஓதுவது

7. இறைந்து ஓதவேண்டிய இடத்தில் இறைந்து ஓதுவது.

8. இமாமைத் தொடர்ந்தவர்கள் வாய் மூடி கிராஅத்தைக் கேட்பது.

9. மூன்று அல்லது நான்கு ரக்ஆத்துடைய தொழுகையில் இரண்டாவது ரக்ஆத்தில் உட்காருவது.

10. முன்னிருப்பு பின்னிருப்புகளில் அத்தஹிய்யாத்து ஓதுவது.

11. ருக்கூவிலும் ஸஜ்தாவிலும் சிறுநிலையிலும் சிறுஇருப்பிலும் ஒருதஸ்பீஹின் அளவு தாமதித்திருப்பது.

12. ஒவ்வொரு பர்லுகளையும் அந்தந்த இடங்களில் செய்து முடிப்பது.

13. ஒவ்வொரு வாஜிபையும் அந்தந்த இடத்தில் தர்த்திப் முறையாக செய்வது.

14. பர்லான தொழுகையில் முந்தின இரண்டு ரக்ஆத்தில் மட்டும் அல்ஹம்துடன் சூரா ஓதுவது.

15. இமாம் எச்செயல் செய்வாரோ அச்செயலில் பிந்தி வருபவர்கள் தொடர்வது.

16. ஸஜதாதிலாவத்து செய்வதும் அதாவது குர்ஆன் ஷரீபில் 14 ஸ்தலங்களில் வருகிற வாக்கியத்தை ஓதினவரும் அதைக் கேட்பவர்களும் ஸஜ்தா செய்வது.

17. வித்று தொழுகையில் துஆ குனூத் ஓதுவது.

18. இரண்டு பெருநாள் தொழுகைகளில் அதிகமான ஆறு தக்பீர்கள் சொல்வது

19. மேற்படி தொழுகையின் இரண்டாவது ரக்அத்தில் ருக்கூவுக்கு முன் தக்பீர் சொல்வது.

20. சலாம் என்னும் வாக்கியத்தை சொல்வது.
21. ஸஜ்தா சஹ்வு செய்வது.

இந்த இருபத்தொன்று வாஜிபுகளில் ஒன்றேனும் தவறுதலாக விட்டுப்போகுமானால் திருப்பித் தொழுவது வாஜிபு அல்லது ஸஜ்தா சஹ்வு செய்யவேண்டும். ஸஜ்தா சஹ்வு என்பது கடாசியிருப்பில் அத்தஹிய்யாத் தோதுவதில் வாசூலுஹூ வரை ஓதி வலது பக்கம் சலாங்கொடுத்து இரண்டு தடவை ஸஜ்தா செய்து பின்பு அத்தஹிய்யாத் சலவாத் இப்றூஹீம் துஆயே மாதூராவும் ஓதி இரு பக்கமும் சலாங்கொடுப்பது.

மஸ் அலா ஸஜ்தா சஹ்வு ஏற்பட்டு செய்யாவிட்டால் தொழுகையைத் திருப்பித்தொழுவது வஜிபாகும். ஆனால் இமாமை தொடர்ந்தவர்களுக்கு வாஜிப் விட்டுப்போனால் ஸஜ்தா சஹ்வு செய்ய வேண்டியதில்லை.

(மஸ்அலா) பெருநாள் தொழுகையிலும் ஜூம்ஆ தொழுகையிலும் வாஜிப்கள் விட்டுப்போனால் ஸஜ்தா சஹ்வு செய்யவேண்டிய தேவையில்லை. (மஸ்அலா) தனித்து தொழுபவர் முந்தின இருப்பில் இராமல் எழுந்துவிட்டால் நேரே நிற்பதற்குமுன் ஞாபகம் வந்தால் உடனே உட்காரவேண்டும். இப்படி ஞாபகம்இல்லாமல் நேரேநின்று விடுவானானல் உட்காராமல் கடாசிஇருப்பில் ஸஜ்தா சஹ்வு செய்ய வேண்டும். பர்லான தொழுகையில் நேரே நின்றபிறகு ஞாபகம்வந்து மறுபடி இருப்பில் உட்காருவானாயின் தொழுகை பஸாதாகி முறிந்துவிடும். சுன்னத்தான தொழுகைகளில் இவ்விதம் ஏற்பட்டால் 3 வது 4 வது ரக்ஆத்களின் ஸஜ்தா செய்யுமுன் ஞாபகம் வந்துவிடுமாயின் உட்கார்ந்து கொள்ளவேண்டும். ஆனால் கடாசியில் ஸஜ்தா சஹ்வு செய்துகொள்ளவேண்டும்.

ஸஜ்தா சஹ்வு வாஜிபாகும் விபரம்.

அத்தஹிய்யாத்தில் ஒருவாக்கியம் விட்டுப்போனாலும் அத்தஹிய்யாத் தோதுமிடத்தில் வேறு துஆக்களை ஓதினாலும் அல்லது

அத்தஹிய்யாத்துக்கு முன் குர்ஆனில் எதாவது ஓதினாலும், அல்ஹம்துக்குப்பிறகு அத்தஹிய்யாத் தோதினாலும், அத்தஹிய்யாத்துக்குப் பதிலாக சலவாத்தோதினாலும், ருகூவு, ஸஜ்தா, சிறுநிலை, இருப்பு இவைகளில் குர்ஆன் ஆயத்துக்களை ஓதினாலும், ஸஜ்தா சஹ்வு வாஜிபாகும். தொழுகையில் கிராஅத்தோதும்போது மூன்று தஸ்பீகுநேரம் சும்மா நின்று விடுவானானால் ஸஜ்தா சஹ்வு வாஜிபாகும். தொழுகையில் சந்தேகம் வராத ஒருவனுக்கு முதல்தடவையாக எத்தனை ரக்ஆத்துத் தொழுதோமென்று சந்தேகம் வந்துவிடுமானால் தொழுகையைத் திருப்பித் தொழுக வேண்டும். ஆனால் அடிக்கடி சந்தேகம் உண்டாக்கக்கூடிய ஒருவனுக்கு இத்தனை ரக்ஆத்துகள் தொழுதோமென்று திட்டப்படாவிடில் யோசனை செய்து மனம் நிச்சயப்படுத்தும் ரக்ஆத்துகளை எடுத்துக்கொள்ள வேண்டியது என்றாலும் ஒவ்வொரு ரக்ஆத்துக்ளிலும் அவை கடைசி ரக்ஆத்து என்று சந்தேகமிருப்பதால் சந்தேகத்துக்குப் பின் தொழுதும் எல்லா ரக்ஆத்துகளிலும் இருப்பு இருந்து அத்தஹிய்யாத்து ஓதி கடைசியில் ஸஜ்தா சஹ்வு செய்துகொள்ளவேண்டும்.

ருகூவில் போனபிறகு அல்ஹம்து அல்லது சூரா கிராஅத்து ஓதவில்லை என்று எண்ணம் உண்டானால் எழுந்து நின்று அதை ஓதி மறுபடியும் ருகூவு செய்து தொழுகவேண்டும். ஆனால் கடைசி இருப்பில் ஸஜ்தாசஹ்வு செய்யவேண்டும். இவ்விதம் ருகூவு செய்யாமல் முன் செய்த ருகூவுவே போதுமென்று தொழுதவானே யானால் தொழுகை கூடாது. ஒருவன் வித்று தொழுகையின் மூன்றுவது ரக்ஆத்தில் குனூத்தோதாமல் ருகூவு செய்வானேயானால் அதற்காக எழுந்து நிற்கவேண்டியதில்லை. கடைசியில் ஸஜ்தாசஹ்வு செய்தால் போதுமானது. ஆனால் ருகூவு செய்தபின் எழுந்து நின்று குனூத்தோதுவானேயானால் மறுபடியும் ருகூவு செய்ய வேண்டியதில்லை என்கிலும் ஸஜ்தாசஹ்வு செய்யவேண்டும். இமாம் தொழுகையில் முன் இருப்பையாவது அல்லது திலாவத்தின் ஸஜ்தாவையாவது அல்லது பெருநாள் தொழுகையின் தக்பீர்களை யாவது மறந்து விட்டுவிடுவாரானால் அவரை பின் தொடர்ந்தவர்களும் விட்டுவிடவேண்டியது.

இமாம் குனூத்ஓதாமல் ருகூவுக்கு போய்விட்டால் பின் தொடர்ந்தவர்கள் குனூத்ஓதிக்கொண்டு இமாமுடன் ருகூவில் சேர்ந்துகொள்ள முடியுமானால் ஓதிக்கொள்ளலாம். இமாம் ருக்வில் இருக்கும்போது இமாமுடன் சேர்பவர்கள் தக்பீர்தஹ்ரீமா கட்டியபின் இமாமுடன் ருகூவில் ஒரு தஸ்பீஹு நேரமாவது சேர்வார்களேயானால் மேல்படி ரக்ஆத் கூடிவிடும். ஆனால் அல்லாஹு அக்பர் என்று தக்பீர்கொண்டே இமாமுடன் ருகூவில் சேர்ந்தால் தொழுகை கூடாது. இமாம் ருகூவு அல்லது ஸஜ்தாவிலிருக்கும்போது பிந்தி சேர்பவர்கள் தனா ஓதிக்கொண்டு சேரமுடியுமென்றால் ஓதிக்கொள்ளலாம். ஆனால் இருப்பில் இருக்கும்போது தனா ஓதாமலே சேரவேண்டும்.

இமாமானவர் பெருநாள் தொழுகைகளின் தக்பீர்களையாவது அல்லது ஜனாஸா தொழுகையின் தக்பீர்களையாவது அல்லது தொழுகையின் ஸஜ்தாக்களையாவது அதிகப்படுத்தினால் அவரைத் தொடர்ந்தவர்கள் விட்டுவிடவேண்டியது.

இமாம் கடைசி இருப்பு இருந்தபின் எழுந்துவிட்டால் அவரைத் தொடர்ந்தவர்கள் உட்கார்ந்திருக்கவேண்டும், இமாம் மறுபடியும் உட்கார்ந்து சலாம் கொடுப்பாரானால் அவரைத் தொடர்ந்தவர்களும் சலாம் கொடுக்கவேண்டியது. ஆனால் கடைசி இருப்பில் உட்காராமல் அடுத்த ரக்ஆத்தில் இமாம் ஸஜ்தா செய்யும்பக்ஷத்தில் அவரைத் தொடர்ந்தவர்களும் சலாம் கொடுத்து பிரிந்துவிடலாம் என்றாலும் இமாம் கடைசி இருப்பில் உட்காராமல் எழுந்து நின்றுவிடுவாரானால் யாவருடைய தொழுகையுங் கூடாது.

தொழுகையின் சுன்னத்து இருபத்தைந்து.

---

1. தக்பீர் தஹ்ரீமாவுக்கு கையை உயர்த்துவது.
2. வித்று தொழுகையில் விட்டு கட்டுவதற்கு கையை உயர்த்துவது.

3. பெருநாள் தொழுகைகளில் தக்பீர்களுக்காக கையை உயர்த்துவது.
4. மேல் கூறிய ஸ்தானங்களில் கை விரல்களை விரித்து வைப்பது.
5. இடது கையின்மீது வலது கையை வைத்து தக்பீர் கட்டுவது.
6. எழுந்திருக்கும்போதும் உட்காரும்போதும் எல்லா ருக்கூன்களிலும் தக்பீர் சொல்லுவது.
7. ருகூவில் முழங்கால்களைப் பிடிப்பது.
8. மேல்படி ருகூவில் கைவிரல்களை கொஞ்சம் விரித்து பிடிப்பது.
9. ருகூவிலும் ஸஜ்தாவிலும் மூன்றுதரம் அதனதன் தஸ்பீஹ் ஓதுவது.
10. ஸஜ்தாவில் எழு உறுப்புகளின் பேரில் கனத்தை சமமாக வைப்பது.
11. சிறுநிலை இருப்புகளில் சற்று தாமதிப்பது.
12. தனா ஓதுவது.
13. அஊது ஓதுவது.
14. பிஸ்மில்லாஹ் ஓதுவது.
15. ஆமீன் என்ற வாக்கியத்தை ஓதுவது.
16. தனா அஊது பிஸ்மில்லாஹ் ஆமீன் இவைகளை மெதுவாக ஓதுவது.
17. ஸலவாத்து ஓதுவது.
18. இமாம் தக்பீர்களை ஜனங்கள் கேட்கும்படி பலத்த சப்தமாக சொல்லுவது.
19. இமாம் ஸமிஅல்லாஹுலிமன் ஹமிதஹ் என்று சொல்வது.
20. இமாமைத் தொடர்ந்தவர்கள் ரப்பனாவலக்கல்ஹம்து என்று சொல்வது.
21. தனியே தொழுகுப்வர்கள் ஸமிஅல்லாஹுலிமன்ஹமிதஹ் ரப்பனாவலக்கல்ஹம்து என்று இரண்டையும் சேர்த்து சொல்வது.

22. ஆண்கள் இருப்பில் வலது காலை நிறுத்தி இடது காலின் பேரில் உட்காருவது,

23. பெண்கள் வலது காலையும் இடது காலையும் வலது புறமாக்கி ஆஸனத்தின்மீது உட்காருவது,

24. இமாமைத் தொடர்ந்தவர்கள் இமாமுக்கு முந்தாமலும் சமமாக இல்லாமலும் பின் தொடர்ந்து சொல்வது,

25. சலாம் கொடுக்கும்போது இருபக்கமும் முகத்தைத் திருப்புவதும் இவைகள் யாவும் சுன்னத்தாகும். ஒன்றையாகிலும் விட்டுவிடும் பக்ஷத்தில் தொழுகை மக்ரூஹ் ஆகிவிடும்.

தொழுகையின் முஸ்தஹப் இருபத்தொன்று,

1. ஆண்கள் தக்பீர் தஹ்ரீமாவில் இருகைகளையும் காதின் சிறு சோணைவரை உயர்த்துவது,
2. ஆண்கள் தொப்புளுக்கு கீழேயும் பெண்கள் நெஞ்சின் பேரிலும் கைகளை வைத்து தக்பீர் கட்டுவது.
3. இயன்றவரை குர்ஆனை நன்றாக ஓதுவது,
4. பஜ்ரு தொழுகையில் இமாம் நாற்பது ஆயத்திற்கு குறையாமல் ஓதுவது,
5. சூராவுக்குமுன் பிஸ்மில்லாஹ் ஓதுவது,
6. கிராஅத்தை மூன்று ஆயத்துகளுக்கு அதிகமாக ஓதுவது,
7. பர்லு தொழுகைகளில் பிந்தின இரண்டு ரக்ஆத்தில் அல்ஹம்து மட்டும் ஓதுவது,
8. நிலையில் இரு கால்களின் மத்தியில் நாலுவிரல் விஸ்தீரணம் உண்டாக்கி கொள்வது;
9. வலம் இடம் திரும்பாமல் இருப்பது,
10. இயன்றவரை கொட்டாவியையும் இருமலையுந்தடுப்பது,
11. ருகூவில் முதுகை ஆஸனத்துக்குச் சமமாகச்செய்வது,

12. ஸுஜூதில் ஏழு உறுப்புகளையும் முறையாக வைப்பது,

13 ஸுஜூதைவிட்டு எழும்பும்போது அதன் ஒழுங்கின்படி உறுப்புகளை எடுப்பது,

14. ஸஜ்தாவில் விரல்களை கிப்லாவுக்கு நோக்கிக்கொள்வது,

15. தனியே தொழுபவர்கள் தஸ்பீஹை மூன்றுக்கு மேல் ஐந்துமுறை அல்லது ஏழுவரை ஓதிக்கொள்வது,

16. ஸஜ்தாவில் இருகைகளையும் காதுகளுக்கு நேராக வைப்பது,

17. ஆண்கள் ஸஜ்தாவில் இரண்டுபுஜங்களை விலாவைவிட்டும், வயிற்றை தொடையைவிட்டும், தொடையை கெண்டக்காலை விட்டும், கெண்டக்காலை பூமியை விட்டும் நீக்கிவைப்பது,

18. பெண்கள் மேற்கூறிய உறுப்புகளை சேர்த்து வைப்பது,

19 இருப்புகளில் இரு கைகளையும் தொடையில் வைப்பது,

20. சலாம் சொல்லும்போது முகத்தை நன்றாய் திருப்புவது,

21. இமாமுடன் முந்தின ரக்அத்தில் சேராதவர்கள் இமாம் கடைசியில் இருபக்கமும் ஸலாம் கொடுத்தபின் எழுந்து இருப்பது முஸ்தஹப்புகளாகும். இவைகளில் ஒன்றையேனும் விட்டுவிடும்பக்ஷத்தில் தொழுகையின் நன்மை குறைந்துவிடும்.

தொழுகையின் முறிச்சல் பதினேழு.

1. தொழுகிறவன் ஞாபகத்தோடு பேசினாலும் அல்லது மறந்து பேசினாலும்,

2. அன்னியர்களுக்கு சலாம் சொன்னாலும் அல்லது ஸலாத்துக்குப் பதில் சொன்னாலும்,

3. துக்ககரமான விஷயத்திற்குப் பதில் நடத்தினாலும்.

4. சந்தோஷமான விஷயத்திற்குப் பதில் சொன்னாலும்,

5. தும்மினவருக்குப் பிரதி பதில் சொன்னாலும்.

6. தில்கடலைப்பருமனுள்ள வஸ்து பல்லில் ஒட்டியதை விழுங்கினாலும்,

7. கொஞ்சமாக தின்றாலும் குடித்தாலும்,

8. உலக ஆபத்தால் சத்தம் வெளியாகும்படி அழுதாலும்,

9. அக்ஷரம் வெளியாகும்படி சத்தமிட்டாலும்,

10. தன் இமாமத்தைத் தவிர மற்றவர் ஓதும் பிழையை திருத்திக் கொடுத்தாலும்,

11. இமாம் தன்னை பின் பற்றியவர்களை தவிர மற்றவர்களின் பிழை திருத்தத்தை கேட்டு ஓதினாலும்,

12. குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளை பார்த்து ஓதினாலும்.

13. ஸஜ்தாவில் கால் விரல்களை பூமியில் படாமல் உயர்த்தினாலும்,

14. ஸஜ்தா செய்யும்போது நெற்றியை பூமியில் படாமல் செய்தாலும்,

15. இமாமுடன் சேர்ந்து தொழுபவர்கள் இமாமுக்கு முந்தினாலும்,

16. ஒரு செயலை மூன்றுமுறை செய்தாலும்

17. தன் காதுக்கு கேட்கும்படி வெடி சிரிப்பு சிரித்தாலும்

இந்த பதினேழு விஷயங்களால் தொழுகை முறிந்துவிடும். திருப்பித் தொழுகவேண்டும்,

---

தொழுகையின் மக்ரூஹ் இருபத்தாறு,

---

1. தொழுகிறவர் ஒரு ருக்னில் இரண்டு செயல் செய்வது;

2. வலமிடமும் முன் பக்கமும் அண்ணாந்து பார்ப்பது,

3. நெற்றியில் பட்ட மண் தூசு முதலியவற்றை துடைப்பது

4. அங்க வஸ்திரம் முதலியவைகளை தோளின்பேரில் போட்டு இருபக்கத்தில் தொங்கவிடுவது,

5. ருகூவில் தலையையும் ஆஸனத்தையும் சமமில்லாமல் வைப்பது,

6. ஆசைவது,

7. சோம்பலால் தேகத்தை வளைப்பது,

8. கொட்டாவி வந்தால் வாய் மூடாமலிருப்பது,

9. கண்களை மூடிக்கொள்வது,

10. விரல்களை நெட்டி முறிப்பது,

11. பட்டு ஆடைகளை கட்டிக்கொண்டு தொழுவது,

12. தலையை திறந்து கொள்வது,

13. யாதொரு வஸ்துவை முகர்வது,

14. முந்தின ரக்ஆத்தில் கீழே உள்ள ஆயத்தும் இரண்டாவது ரக்ஆத்தில் மேலே உள்ள ஆயத்துகளை பர்லான தொழுகையில் ஓதுவது,

15 பர்லு தொழுகையில் முந்தின ரக்ஆத்தில் சிறிய சூராவும் பிந்தின ரக்ஆத்தில் பெரிய சூராவும் ஓதுவது,

16. ஆயத்துகளை வேகமாக ஓதுவது,

17 பர்லு தொழுகையில் ஒரு சூராவை திருப்பி ஓதுவது,

18. ஸஜ்தா செய்யும்போது முழங்கைகளை தரையில் படுக்க வைப்பது,

19 ஆண்கள் தலையில் நீளமாக ரோமங்கள் வளர்ந்திருந்தால் அதை கொண்டை போட்டுக்கொள்வது,

20. ஸஜ்தா செய்யப்போகும்சமயம் கைகளை முந்தி வைப்பது,

21. ஸஜ்தாவைவிட்டு எழும்பும்போது முழங்காலை முந்தி தூக்குவது,

22. தலைப்பாகைமீது ஸஜ்தா செய்வது,

23. ஸஜ்தாவில் தொடையுடன் வயிற்றை சேர்ப்பது,

24. தொழுகிற இடத்தில் உயிருள்ள உருவப்படங்களை வைத்திருப்பது,

25 ஆண்கள் தொழுகையில் முழு சிவப்பு மஞ்சள் நிறமுடைய துணிகளை அணிவது,

26. சப்தமில்லாமல் புன் சிரிப்பு சிரிப்பதும் தொழுகையின் மக்ரூஹ்கள் இவைகளினால் சிறிய பாவமும், நன்மை குறைவும் ஏற்படும்.

தொழுகவேண்டிய முறை.

தொழுபவன் மேற்கூறிய பர்லு வாஜிப் சுன்னத்து முதலிய சகல காரியங்களையும் தெரிந்து மிகப்பேணுதலாக கிப்லாவின் பக்கம் முகத்தை திருப்பி நின்றவனாக நிய்யத் செய்யவும். அதாவது சுன்னத்து தொழுகிறவன் அல்லாஹ்வுக்காக இத்தனை ரக்ஆத் தொழுகிறேன் என்றும், பர்லு தொழுகையாயின் அல்லாஹ்வுக்காகஇன்ன நேறத்து தொழுகை இத்தனை ரக்ஆத் தொழுகிறேன் என்றும், வித்று தொழுகையானால் இந்த இரவின் இஷாவித்று அல்லாஹ்வுக்காக தொழுகிறேன் என்று மனதிலும் வாயினாலும் சொல்லி நிய்யத் செய்வது முஸ்தஹபாகும்.

இனி இமாமுடன் சேர்ந்து தொழுகிறவர்கள் இந்த இமாமை பின் தொடர்ந்தவனாகத் தொழுகிறேன் என்று நிய்யத் செய்து கொள்ளவும் பிறகு இரண்டு கைகளின் பெரு விரலினால் இரு காதுகளின் சிறு சோணையை தொட்டு உள்ளங்கைகளை கிப்லாவின் பக்கம் திருப்பி மற்ற விரல்களை கொஞ்சம் விரித்துக்கொண்டு அல்லாஹ் அக்பர் என்று சொல்லி தொப்புழுக்கு கீழே இரண்டு கைகளையும் கொண்டுவந்து இடது கையின்பேரில் வலது கையை வைத்து இடது கையின் மணிக்கட்டை வலது கையின் சுண்டு விரலாலும், பெருவிரலாலும் பிடித்து, வலது கையினுடைய மற்ற மூன்று விரல்களையும் இடது கையின்பேரில் வைத்து தக்பீர் கட்டிக்கொள்ளவேண்டும்.

இப்படி கட்டுவதற்கு தக்பீர் தஹ்ரீமா என்று சொல்லப்படும். ஆனால் பெண்கள் கைகளை தோள்வரை உயர்த்தி விரலை திறக்காமல் நெஞ்சின் மீது தக்பீர் கட்டிக்கொள்ளவேண்டும். தக்பீர் கட்டும்போது கிப்லாவை முன்னோக்கி நிற்கவேணும். இரண்டு கால்களின் மத்தியில் நான்கு விரல் அளவு விஸ்தீரணமும், பெண்கள் இரு பாதங்களும் சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டும். தொழுகிறவர்கள் பார்வை ஸஜ்தா செய்கிற இடத்திலிருக்கவேண்டும். தக்பீர் கட்டியபின்(தனா)சுப்ஹானக்கல்லாஹும்ம வபிஹம்திக்க வதபாரகஸ்முக்க வதஆலாஜத்துக்க வலாயிலாஹகைருக்க அஊதுபில்லாஹி மினஷ்ஷைய்த்தானிற் றஜீம் பிஸ்மில்லா ஹிற்ரஹ்மா னிற்ரஹீம்

என்று ஓதியபின் அல்ஹம்தும் சூராவும் ஓதி தக்பீர் சொல்லிக் கொண்டு ருக்கூவு செய்யவேண்டும். ஆனால் இமாமைதுயர்ந்தவர்கள் தனாவும் ஆமீனும்தவிர மற்றவைகளை ஓதாமலிருக்கவேண்டும். ருக்கூவில் விரல்களை விரித்து முழங்காலை பிடித்து குனிந்து கண்பார்வை பாதங்களிலிருக்கவேண்டும். கால்களை மடக்காமல் நேராய் தலையை இடுப்புக்குச்சமமாக வைக்கவேண்டும், ஆனால் பெண்கள் அதிகம் குனியவேண்டியதில்லை. உடம்புமுழுமையும் முழங்கால்களையும் சற்று வளைத்து கைவிரல்களை விரிக்காமல் வைத்துக்கொள்ளவேண்டும்இவ்வாறு குனிந்துகொண்டு சுப்ஹானரப்பியல் அலீம் மூன்று அல்லது ஐந்து தடவை மெள்ள ஓதவேண்டும். பிறகு ஸமியல்லாஹு லிமன் ஹமீதா என்று சொன்னவனாக சிரசை உயர்த்தி கைகளை தொங்க விட்டு நிமிர்ந்து நின்றஉடன் அல்லாஹும்மரப்பனா வலக்கல்ஹம்து என்று சொல்லவும். ஆனால் இமாமை துயர்ந்தவர்கள்ரப்பனாவலக்கல் ஹம்து என்றுமட்டும் சொன்னால் போதும் பின்பு அல்லாஹு அக்பர் என்று சொல்லி நேராக உட்கார்ந்து முதலில் முழங்காலை தரையில் படும்படி வைத்து கைவிரல்களை நேராக நீட்டி இரு பெரு விரல்களும் காதுகளுக்கு சரியாயிருக்கும்படி செய்யவேண்டும். கால்கள் நிறுத்தப்பட்டு விரல்களை கிப்லா பக்கமாக இருக்கும்படி செய்யவும் இரண்டு தோட்களும் விலாவைவிட்டு அகட்டி, வயிறு தொடையை விட்டும், தொடைகள் கெண்டைக்காலைவிட்டும் நீக்கி கண்பார்வை மூக்கின் பேரிலிருக்கவேண்டும். இவ்வாறு செய்வதில் முதுகு வளைந்திருக்கப்படாது. தேகத்தின் கனமானது எல்லா உருப்புகளின்பேரில் சமமாக இருக்கவேண்டும். அப்போது மூன்று அல்லது ஐந்து தடவை சுப்ஹானரப்பியல் அஃலா என்று மெள்ள ஓதிக் கொள்ளவும்.ஆனால் பெண்கள் அவர்களின் சர்வ உருப்புகளையும் ஒடுக்கி இரண்டுபாதங்களையும் வலதுபக்கம் வைத்துக்கொள்ளவேண்டும் பின்பு அல்லாஹ்அக்பர் என்றுசொல்லிக்கொண்டுமறுபடியும் ஒரு முறை ஸஜ்தா செய்யவேண்டும். கைகளை பூமியில்ஊண்டாமல்முழங்காலின் மீது கையை வைத்து கால்களின் பேரில் பாரத்தை வைத்தவனாக உட்காராமல் நேராக எழுந்து நிற்க வேண்டியது. இதுவேதொழுகையில் ஒரு ரக்ஆத்தாகிறது. இவ்விதம் நின்றபிறகு தனாவும் அவூதும் ஓதாமல் பிஸ்மில்லாஹ்வுடன் அல்ஹம்தும்

சூராவும் ஓதி முந்தின ரக்ஆத்தைப்போல, தொழுகவேண்டியது. இவ்வாறாக இரண்டாவது ரக்ஆத்தின் இரண்டு ஸஜ்தாவும் செய்த பின்னர் இடதுகாலை படுக்கவைத்து ஆஸனம் படும்படி உட்கார்ந்து வலது காலை நிறுத்தி மேல்படி கால் விரல்களை கிப்லாபக்கமாக வைத்துக்கொண்டு கைவிரல்களை சற்று விரித்து தொடையின்மீது வைக்கவும். ஆனால் பெண்கள் இரண்டு பாதங்களையும் வலதுபக்கம் விட்டு ஆஸனத்தை பூமியில் வைத்திருக்கவேண்டும்.

கைவிரல்களை சேர்த்து கண்களின் பார்வையை மடியினமீது வைத்தவனாக அத்தஹிய்யாத்தை ஓதவேண்டும். அஷ்ஹது அன்லா யிலாஹ என்று வரும்போது வலது கையின் கலிமா விரலை உயர்த்தி இல்லல்லாஹு என்று வந்தவுடன் மேல்படி விரலை கீழே வைத்து விடவேண்டும். மூன்று அல்லது நான்கு ரக்அத்கள் தொழுக வேண்டுமானால் அப்துஹூவ ரசூலுஹு வரை ஓதி எழுந்து முன் போல பிஸ்மில்லாஹ்வும் அல்ஹம்து மட்டும் ஓதவேண்டும். சுன்னத்தான தொழுகையானால் நான்கு ரக்ஆத்துக்கும் பிஸ்மில்லாஹ் வுடன் அல்ஹம்தும் சூராவும் ஓதி தொழுகவேண்டும். இவ்விதம் தொழுகை முடிந்து கடைசி இருப்பில் அத்தஹிய்யாத்து தருதே இப்ராஹீம் துஆயேமாதூராவும் ஓதி, அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ் மத்துல்லாஹி என்று வலது பக்கமும், அப்பால் அஸ்ஸலாமு அலைக் கும் வரஹ்மத்துல்லாஹி என்று இடது பக்கமும் முகத்தை திருப்பி சலாம் கொடுக்கவேண்டும். வித்று தொழுகையில் மூன்றாவது ரக்க ஆத்தில் பிஸ்மில்லாஹ்வும், அல்ஹம்தும் சூராவும் ஓதி இரண்டு கை யையும் தொங்கவிட்டு அல்லாஹ் அக்பர் என்று காதுகளின் இரு சோணைகளையும் இரண்டு கைவிரல்களால் தொட்டு தக்பீர்கட்டி துஆ குனூத் ஓதவேண்டும். துஆ குனூத் ஓதத்தெரியாதவர்கள் ரப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வக்கினா அதாபன்னார் என்று ஓதினால் போதும்.

ஜும்ஆ தொழுகையின் பயான்.

ஜும்ஆ என்னும் வெள்ளிக்கிழமையத்தினம் குளித்து இயன்ற வரை நல்ல ஆடை உடுத்தி வாசனைபூசி தொழுகிறது நல்லது

ஜும்ஆவின் பாங்கு சொன்னபிறகு வியாபாரம் தொழில் செய்வது ஹாமாயிருக்கும். ஜும்ஆ ஏழுவகையாளர்கள் மீது கடமையில்லை

1. ஒரு ஊரில் பதினைந்து நாள்கள் இராமல் பிரயாணம் செய்கிறவர்கள்.
2. சிறையில் அடைபட்டவர்கள்.
3. விரோதியின் பயத்தால் வெளியில் வர முடியாதவர்கள்.
4. நடக்க முடியாதவர்கள்.
5. இரண்டு கண் பார்வையற்றவர்கள்.
6. அதிக வியாதியுள்ளவர்கள்.
7. பெருமழையாலும் சேரு முதலியவற்றால் கஷ்டப்படுகிறவர்கள்

ஜும்ஆ தொழுக பள்ளியில் நுழைந்தவுடன் உலுவின் நபில் இரண்டு ரக்ஆத் மஸ்ஜீத் நபில் இரண்டு ரக்ஆத் சுன்னத்து ஜும்ஆ நான்கு ரக்ஆத் தொழுதுகொள்ள வேண்டும், அப்பால் தூங்காமல் குத்பா ஓதுவதை கேட்கவேண்டும். பிறகு இமாமுடன் பர்லு இரண்டு ரக்ஆத் தொழுதபின் ஜும்ஆ சுன்னத் நான்கு ரக்ஆத் ஆகிர் லுஹர் நான்கு ரக்ஆத் வக்த்து சுன்னத் இரண்டு ரக்ஆத் தொழுகவேண்டும். ஜும்ஆ கூடாத ஊரில் தான் ஆகிர் லுஹர் தொழுகிறது. விஷயமாய் இக்திலாபுகளுண்டாயிருக்கிறது. இது விஷயமாய் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது நலம்.

பெருநாள் தொழுகையின் பயான்.

ஜும்ஆ தொழுகை எவர்மீது விதியாகுமோ அவர்மீது பெருநாள் தொழுகை விதியாகும். அதாவது வாஜிபாகும் ஜும்ஆவில் குத்பா ஓதுவது பர்லாகும். பெருநாள் தொழுகையில் குத்பா ஓதுவது சுன்னத்தாகும். இந்த பெருநாள்களில் ஸ்நானம் செய்வதும் இயன்றமட்டும் நல்ல உடைகள் வாசனை யணிவது சுன்னத்தாகும். பெருநாள் தொழுகையின் நேரமாகிறது சூரியன் உதய முதல் இரண்டு ஜாமம் வரையாக இருக்கும் சுமார் $11\frac{1}{2}$ மணிவரை தொழுதுகொள்ளலாம்.

ஜனாஸா தொழுகையின் பயான்.

யாருக்காவது மவுத்தினடையாளம் காணப்படுமானால் தன் குற்றங்களுக்கு ஆண்டவனிடம் பிழை பொறுக்கத் தேடவேண்டும். சமீபத்திலிருப்பவர்கள் கலிமா யாசீன் சூரா இவைகளை கொஞ்சம் பெலமான சத்தத்தோடு ஓதவேண்டும். முகத்தை கிப்லாபக்கமாக திருப்பி போடவேண்டும். அசுத்தமான ஸ்திரி புருஷர்கள் அவ்விடமிருந்தால் நீங்கிக்கொள்ளவேண்டும். மரணமடைந்த உடன் குளிப்பாட்டுவதும்.கபனிடுவதும் வாஜிபு. ஜனாஸாவை தொழுகவைப்பதும் அடக்கம் செய்வதும் பர்லு கிபாயாவாகும். ஜனாஸா தொழுகையின் நிய்யத்து தொழுகை ஆண்டவனுக்கும் துஆ மையத்திற்கும், நான்கு தக்பீர்களுடன் இமாமையின் துயர்ந்தவனாக தொழுகிறேன் அல்லாஹு அக்பர் என்று தக்பீர்கட்டி சுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலாஜத்துக வஜல்லதனாவுக வலாயிலாஹ கைருக அஊது பில்லாஹி மினஷ்ஷைய்த்தானிற்றஜீம் பிஸ்மில்லாஹிற் ரஹ்மானிற்றஹீம் என்று ஓதவேண்டும். இரண்டாவது தடவை அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொன்னபின் தரூதேஇப்றாஹீமை ஓதி மூன்றாவது தடவை அல்லாஹு அக்பர் என்று சொன்னபின் அல்லாஹும்மக்பிர்லி ஹய்யினா மய்யித்தினா வஷாஹிதினா வகாயிப்பினா வஸகீரினா வகபீரினா வதக்ரினா வஉன்தானா அல்லாஹும்ம மன் அஹ்யைத்தஹு மின்னாப அஹ்யிஹி அலல் இஸ்லாம் வமன்தவப்பைத்தஹு மின்னா தவப்பஹு அலல் ஈமான் என்றோதி நான்காவது தக்பீரில் ரப்பனா ஆத்தினா பித்துன்யாஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வக்கினா பிரஹ்மத்திக்க அதாபல் கப்ரி வஅதாபன்னார் என்று ஓதி ஸலாம் கொடுக்கவேண்டியது.

ரம்லான் நோன்பின் விபரம்.

விடியற்காலம் ஸுப்ஹு ஸாதிக்மெய் வெளுக்குங்காலத்துக்கு முன் பசியாரி அதிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும்வரை யாதொரு வஸ்துகளும் அருந்தக்கூடாது. ஸ்திரிகளுடன் சரஸமான பேச்சும்

பேசக்கூடாது. இதிலநேகம் சங்கதிகளிருக்கிறது. அவைகளை ஆலிம்களிடம் கேட்டு தெரிந்து அதன்படி நடந்துகொள்ளவேண்டியது. ரம்லான் முப்பதிலும் இமாம் ஜமாஅத்துடன் எல்லா பர்லுத் தொழுகைகளையும் தொழுதுவருவது சுன்னத்து. தராவீஹ் இரண்டிரண்டு ரக்ஆத்தாக இருபது ரக்ஆத் இமாம் ஜமாஅத்துடன் தொழுக வேண்டும். இமாம் ஜமாஅத்து தவரிவிட்டால் தனித்து மேல்படி தொழுகையை இரண்டிரண்டு ரக்ஆத்தாக தொழுகவேண்டும்.

பித்ரா.

சகல செலவுகளும்போக $52\frac{1}{2}$ ரூபாய் நாணயமாவது ஆபரணமாவது, சொத்துக்களாவது வைத்திருக்கும் ஒவ்வொரு முஸ்லீம் ஆண் பெண்கள்பேரில் பித்ராகொடுக்கவேண்டியது (வாஜிபு) கடமை. அதாவது பட்டணம்படி $2\frac{1}{2}$ அந்தந்த தேசங்களில் வழங்கும் தானியங்கள் அல்லது கோதுமை இவைகளுடைய கிரயம் ஏழை மிஸ்கீன்களுக்கு பெருநாள் காலையில் கொடுப்பது நோன்புக்கு வாகனமாகிறது.

ஜக்காத்.

மேலே சொன்னபடி சகல செலவுகளும்போக $52\frac{1}{2}$ ரூபாய் நாணயமாவது, ஆபரணமாவது, சொத்துக்களாவது வைத்திருக்கும் ஒவ்வோர் முஸ்லீம் ஆண் பெண்கள் மீது வருஷாவருஷம் 40-ல் ஒருபாகம் ஏழைகளுக்கு கொடுப்பது கடமையாகும். மேலே சொன்ன தொகை குறையாமல் ஒரு வருஷம் முழுவதும் கைவசமிருந்தால் தான் கொடுக்கவேண்டியது கடமை. இடையில் செலவாகிவிட்டாலும், ஒரு வருஷம் பூர்த்தியாகாவிட்டாலும் கொடுப்பது கடமை இல்லை. மேலே சொன்ன தொகைக்கு மேல் சாஸ்திப்படி மானல் ஈவுப்படி 40-ல் ஒரு பாகம் கணக்குப்பார்த்து கொடுக்கவேண்டும்.

ச த க் கா.

சதக்காவின் தவாபு ஐந்து வகைப்படும்

1. சரீர சுவாத்தியமான மனிதனுக்கு கொடுத்தால் ஒன்றுக்கு பத்து தவாபு.

2 நோய் மிடிமையாளருக்கு கொடுத்தால் ஒன்றுக்கு தொண்ணூறு தவாபு.

3 தன் பந்துக்களில் ஏழையாயிருக்கிறவர்களுக்கு கொடுத்தால் ஒன்றுக்கு தொளாயிரம் தவாபு.

4. தாய்தகப்பனுக்கு கொடுத்தால் ஒன்றுக்கு லட்சம் தவாபு.

5 பிக்ஹு மஸ்லாத் தெரிந்திருக்கிற ஆலிம்களுக்கு அல்லது இல்மு படிக்கிறவர்களுக்கு கொடுத்தால் ஒன்றுக்கு ஒன்பது லட்சம் தவாபு கிடைக்கும்.

குர்பானி.

துல்ஹஜ்ஜு மாதம் பெருநாள் ஈதுல் அலுஹா அன்று சீமான்கள் ஒவ்வொருவரும் குர்பானி கொடுக்கவேண்டியது தங்கள்மீது வாஜிபென அறியவேண்டும். குர்ஆன் ஷரீபில் அல்லாஹுத்த ஆலா நமது நபிகள் ரசூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குப் பின்வருமாறு கூறியிருக்கிறான். நீர் உம்முடைய இறைவனை தொழுதுகொண்டு குர்பானியை (பலியை) நிறைவேற்றுவீராக எவனொருவன் சீமானாயிருந்து குர்பானி செய்யவில்லையோ அவன். ஒருபோதும் எங்களுடைய முஸல்லாவினிடம் வரவேண்டாமென்று நபிகள் பிரான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

பருவமடையாத சிறுவர்கள் அடிமைகள் இவர்களுக்கு பித்ரா ஸதக்கா கொடுக்க கடமையாயினும் குர்பானி கொடுக்க வேண்டியது கடமையல்ல. பருவ மடையாத சிறுவன் சீமானாயிருந்தால் குர்பானி கொடுக்கவேண்டும். குர்பானி கொடுக்க

வேண்டிய நாள் துல்ஹஜ்ஜு மாதம் 10, 11, 12 தெய்திகளில் ஆகும். ஒட்டகம், பசுமாடு, காளைமாடு, ஆடு, இவைகளை குர்பானி செய்யவேண்டும். ஒட்டகமானால் ஐந்துவயதும், பசு காளை இரண்டு வயதும், ஆடு ஒரு வயதுள்ளதாகவுமிருக்கவேண்டும். குர்பானி கொடுக்கும் கிடாய் பெருங்கொம்புள்ளதாயும், உருப்புகளில் குற்றங் குறையில்லாததாகவும், அழகானதாகவும்,கொழுத்ததாகவும் இருக்க வேண்டும். வயதுவந்தவர்கள் ஒன்றுக்கு ஒரு ஆடு வீதமாகவும்,பசு காளை ஒட்டகம் எழுபேர்களுக்கு ஒன்று வீதமாகவும் கொடுக்கவேண்டும்.

ஹலாலாகிய உயிர் பிராணிகளை அறுக்கிறதின் பயான்

அறுப்புடைய பர்லு நாலாக இருக்கும்.

1. முடிச்சுக்கும் பதைப்புக்கும் இடையிலறுக்கிறது நாலுநரம்புகளும் அறுபடும்படி அறுக்கிறது.

2. அறுக்கிறவன் முஸ்லிமாயிருக்கிறது. அவன் பிஸ்மில்லாஹ் சொல்லும்படியாயும் அறுக்கத் தெரிந்தவனாகவுமிருக்கிறது.

3. நாலு நரம்பும் அறுபட்டு இரத்தம் ஓடும்படி தகுந்த ஆயுதம் கொண்டறுக்கிறது.

4. அல்லாஹுத்தஆலாவுடைய திருநாமமாகிய பிஸ்மில்லாஹ் சொன்னவுடன் அறுக்கிறது.

அறுப்புகளின் சுன்னத்து.

இன்ன ஹலாலான உயிர் பிராணியை அறுக்கும்போது கிப்லாவுக்கு நோக்க முகத்தை திருப்பி வைத்துக்கொள்வது. ஒட்டகையை இடது முன்னங்காலை கட்டி நிலையில்விட்டு அறுக்கிறது. ஆடு மாடுகளை படுக்கப்போட்டு அறுக்கிறது, ஒட்டகம் தாரா இவைகளைப் போல் கழுத்து நீண்டதை அடிக்கழுத்திலறுக்கிறது. ஆடு மாடுகளை மேல் கழுத்திலறுக்கிறதும் சுன்னத்து.

அறுப்புகளின் முஸ்தஹப்பு.

அதை யொருசாய்த்துப்போடு. முந்தியே அகலமான கத்தியை கூர்மையாக்கிக்கொள்கிறது. இடது பாகத்தின்பேரில் மெல்லினமாக படுக்கைப்போடுகிறது. மூன்று காலையும் கட்டிக்கொள்வது அல்லது இடதுகையால் உதைக்கவிடாமல் பிடித்துக்கொள்வது. வலது கையால் தீவிரமாக அறுக்கிறது. பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்ற நிய்யத்துடன் அறுக்கிறது. நாலு நரம்புகளையும் சரியாக அறுக்கிறது. பகலில் அறுக்கிறது. இவ்வளவையும் பேணிக்கொள்வது முஸ்தகஹப்பு.

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	12	பாத்தியவான்	பாத்திரவான்
3	9	முடிவில்	நன்மைக்குப் பயன் நன்மையும் தீமைக்குப் பயன் தீமையும் தரத்தக்க நன்மை தீமையின் பாகுபாடு இறைவன் வசத்திலிருக்கிறதென்று உறுதிகொண்டேன். (சேர்த்துவாசிக்க)
10	4	தண்ணீரான	தண்ணீரானது
11	1	காரியங்களணைத்தும்	காரியங்களனைத்தும்
24	15	தரையில்	தரையில் வைத்து பின் உள்ளங்கைகளையும் பின் மூக்கையும் பின் நெற்றியையும் தரையில்